அஸ்மத் குருப்யோ நம:

அஸ்மத் பரம குருப்யோ நம:

அஸ்மத் ஸர்வகுருப்யோ நம:

ஸ்ரீரங்கநாதயதீஸேகரம் ஆஸ்ரயாம:

வேதாந்த லக்ஷ்மணமுநே: பாதரேகாமயம் ஸதா

தததீனப்ருவ்ருத்யாதீம் ஹாரீதம் மாதவம் பஜே

# தேசிகப்ரபந்தம்...பிள்ளையந்தாதி



## இரண்டாம் பாசுரம்

சென்னிவணங்கச் சிறுபனிசோரவெங்கண்ணிணைகள்

வெந்நரகங்களும்வீய வியன்கதியின்பமேவத்

துன்னுபுகழுடைத்தூப்புல்துரந்தரன்தூமலர்த்தாள்

மன்னிய நாள்களும் ஆகுங்கொல் மாநிலத்தீர் நமக்கே

முதல் பாசுரம் தன்னில் பகவான் பிராட்டி நம்மாழ்வார் இவர்கள் பெருமையுடன் ராமானுஜன் உகந்த வாழ்வினை குறிப்பிட்டு பின்னர் அவருடைய சாஸ்திரங்களை அடி பற்றிய வழியினை பின்பற்றிய தூப்புள் பிள்ளையின் திருவடித் தாமரை மலர்கள் நம் போன்றோரின் தலைக்கு அலங்காரமாய் அமைந்தன என ஆசார்ய பரம்பரை என்றும் உத்தேஸ்சயம்  என முடித்தார்.



*ஆபகவத்த: அநகாம் ஆச்சார்ய சந்ததிம் வந்தே*(ஸ்வாமி தேசிகன்)

சமுதாய அநுபவ பாசுரார்த்தங்கள்

*சென்னி வணங்க*

தேசிகன் திருவடிகள் நம் தலை முடிக்கு அலங்காரமாய் அமைந்தவுடன்

அஹங்கார மமகாரதிகள் விலகின

*ஏறடர்த்ததும்ஏனமாய்நிலம்கீண்டதும்* *முன்னிராமனாய்*

*மாறடர்த்ததும்மண்ணளந்ததும்* *சொல்லிப்பாடி  வண்பொன்னிப்பே*

*ராறுபோல்வரும் கண்ணநீர்கொண்டு** *அரங்கன்கோயில் திருமுற்றம்*

*சேறுசெய்தொண்டர்சேவடிச்செழுஞ்சேறு என்சென்னிக்கணிவனே*(குலசேகர ஆழ்வார்)

பகவத் ஸம்பந்தம் ஏற்பட ஆரம்பித்தது

பாகவத பெருமைகளை உணரவைத்துவிட்டது.

பாகவத லக்ஷணம் இந்த பாசுரத்தில் அனவரதம் அவதார லீலைகளை சொல்லி சொல்லி அரங்கனை சிந்தனையில் நிறுத்தி கண்ணீர்விட்டு ஆடி பாடுபவர்களே என சொல்லபட்டுள்ளதை காணீர்.

வ்ரீடாவித்த வதான்ய தானவ யசோ நாஸீரதாடீ பட:

த்ரையக்ஷம் மகுடம் புநந்நவது நஸ்த்ரைவிக்ரமோ விக்ரம:|

யத் ப்ர்ஸ்தாவ ஸமுச்ச்ரித த்வஜபடீ வ்ருத்தாந்த ஸிந்தாந்திபி:

ஸ்ரோதோபி: ஸூரசிந்துரஷ்டஸு திஸா ஸௌதெஷு தோதுயதே||

(த.ஸ்தோ)



அந்த பகவத் திருவடி சிரம் தாழ்த்திய பலிக்கு எப்படி அநுக்ரஹித்ததோ தேஹ அபிமானிகளான நாமும் ஸ்வாமி தேசிக திருவடிக்கு தலை வணங்கினால் பெறுவது பெரும் பேறாக இருக்கும்.

*சிறுபனி சோர எங்கண்ணினைகள்*

ஸ்வாமி தேசிகனின் பிரபாவத்தினால் கடின மனம் கூடிய நம் போன்றோரின் கண்களிலும் ஈரமாக பனித்துளிகள் தோன்றின உருகி ஓடவும் துடங்கின. இவ்விடத்தில் ஆழ்வார் தலைவியின் நிலை தன்னை தாயார் கூறியது போன்றதான நிலை ஸ்வாமி தேசிகன் விஷயத்தில் நமக்கு 24 மணி × 7 நாட்களும் ஏற்படவேண்டும் அதுவே பரமபாவன அநுபவ ரசம் நமக்கு ஆச்சார்யன் பக்கலிலே.

கங்குலும் பகலும் கண் துயிலறியாள்

கண்ணநீர் கைகளால் இறைக்கும்,

சங்கு சக்கரங்களென்று கை கூப்பும்

'தாமரைக் கண்' என்றே தளரும்,

'எங்ஙனே தரிக்கேன் உன்னைவிட்டு' என்னும்

இருநிலம் கை துழாவிருக்கும்,

செங்கயல் பாய்நீர்த் திருவரங்கத்தாய்!

இவள்திறத்து என் செய்கின்றாயே?' 7.2.1

(திருவாய்மொழி 7.2.1 - நம்மாழ்வார்)

வெந்நரகங்களும் வீய வியன் கதி இன்பமேவ

அதனால் அந்த க்ஷணமே இரண்டு காரியங்கள் நடந்தன அனிஷ்ட்ட நிவர்த்தி ஒன்று, மற்றொன்று இஷ்ட ப்ராப்தி

இத்தேசத்தில் ப்ரபத்தி அநுஷ்டானத்தை தடுக்கும் ப்ரதிபந்தகங்கள் விலகுதலும் அந்த தேசத்தில் கைங்கர்யம் பெற உறுப்பான ப்ரபத்தி அனுஷ்டிக்க உறுப்பாய் ஆச்சார்ய ஸம்பந்தம் ஏற்பட்டுவிட்டது.



துன்னு புகழுடை தூப்புல் துரந்தரன்

*தேவி த்வந் மஹிமாவதிர் ந ஹரிணா நாபி த்வயா ஜ்ஞாயதே*

யத்யப்யேவமதாபி நைவ யுவயோ:

ஸர்வஜதா ஹீயதே |

யந்நா ஸ்தயேவ ஸ்ததஜதாமநுகுணாம் ஸர்வஜ்ஞதாயா விது:

வ்யோமாம்போஜ மிதந்தயா கில விதந் பிராந்தோயமித்யுச்சதே||

ஆழ்வானும் பிராட்டி விஷயத்தில் தாயே உன் மஹிமை தனை பதி ஹரியும் அறிவது அரியது என அருளியது போல் தேசிக விஷயத்தில்

ஜகத் காரணன் ஸ்ரீமந் நாராயணனும் விஸ்மயிக்கும்படி அத்யாத்ம கிரந்த நிர்மாண களத்தில் ராமானுஜ வழித்தோன்றலாக

சுழன்று பணியாற்றி புகழ் பெற்றவன் நம் தூப்புல் பிள்ளை

அவன் புகழ் நம் உள்புகல் பரம பாக்யம் அன்றோ.

தூமலர்தாள் மன்னிய நாள்களும் ஆகுங்கொல்

அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன் எனும்படி

தூப்புல் குலமணி திருவடி ஸம்பந்தம் பெற்ற நாள் அன்றோ நன்நாள் நம் அனைவருக்கும்

காலத்தை பகவத் விஷயத்தில் சொல்லுமிடத்தில்

காலஸ்ச நாராயண: என்றும்

காலத்தை பகவத் ஸம்பந்தம் பெற்றது என்று அக்காலத்தில்

பகவத் கைங்கர்யத்தில் இழிபவனை



வையத்து வாழ்வீர்காள் இவ்விடம் சொல்வதெல்லாம்

ஸ்வாமி தேசிக திருவடிகளை பற்றல் நமக்கு அவஸ்யம் என்பதற்காக.

*மாநிலத்தீர் நமக்கே*

ஆகவே கர்ம பூமியில் ஆச்சார்ய பரம்பரை ஸம்பந்தம் பெற்று அதனடியாய் ஸ்வாமி தேசிக ஸம்பந்தம் பெற்ற நமக்கே

பரிபூர்ண ப்ரஹ்மானுபவம் ஸாத்யம் ஆகும் உயரிய க்ருத்யா ரூப சரணாகதி அநுஷ்டானத்தினால்.

நாராயணனே நமக்கே எனும்படி

ஸ்வாமி தேசிகனுக்கே நாம்.

எனும்படி இப்பாசுரத்தை ஸ்மரிப்பீர் அதனால்

பொலிக பொலிக போயிற்று வல்லுயுயிர் சாபம் எனும்படி வாழ்வீராக.

(வ்யாஸத்தில்குற்றங்கள் நம்மை சேர்ந்தவை

உயர்வுகள் ஆச்சார்யனின் அநுக்ரஹம் மட்டுமே)

ஆழ்வார் ஆச்சார்யன் தேசிகன் திருவடிகளே சரணம்

ஆசூரி ஶ்ரீதர தாசன் மேல மாம்பலம் சென்னை